DINATHANTHI 08 FEB 2010

### உடல் நலத்தை பாதிக்கும் என்பதால்

# மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை அறிமுகப்படுத்த கூடாது

## சத்குரு ஜக்கி வாசுதேவ் அரசுக்கு கோரிக்கை

கோவை,பிப்.8–

உடல் நலத்தை பாதிக்கும் என்பதால், மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை அறிமுகப் படுத்த கூடாது என்று சத்குரு ஜக்கி வாசுதேவ் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.



சத்குரு ஜக்கி வாசுதேவ்

### ஜக்கி வாசுதேவ் பேட்டி

கோவையை அடுத்த வெள் ளிங்கிரி மலை அடிவாரத்தில் உள்ள ஈஷா யோகா மையத் தில் சத்குரு ஜக்கி வாசுதேவ் நிருபர்களுக்கு பேட்டி அளித் தார். அவர் கூறியதாவது:–

மரபணு மாற்றப்பட்ட உணவு பொருட்களை உற் பத்தி செய்வது, உலகிற்கு சோதனை ஏற்பட்டு வருவதை காட்டுகிறது. மரபணு மாற்றப் பட்ட காய்கறிகளை உற்பத்தி செய்வதால் சுற்றுச்சூழல் அதிக அளவில் பாதிக்கப்படு கிறது.

பயன்படுத்தும் போது உடல் நலத்தை பாதித்து ஆரோக்கிய குறைவு ஏற்படும் என்றும் ஐரோப்பிய விஞ்ஞா னிகள் தங்களது ஆய்வில் நிரூ பித்து உள்ளனர். மரபணு மாற் றப்பட்ட(பி.டி.ரக) கத்த ரிக்காயை உற்பத்தி செய்தற்கு பல்வேறு நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

### 100 கோடி மக்கள்

100 கோடி மக்கள் வாழும் இந்தியாவில் பி.டி. கத்த ரிக்காயை உற்பத்தி செய்து பயன்படுத்தி, மீண்டும் பயன் பாட்டுக்காக வெளிநாடுகளில் இருந்து விதைகளை வாங்கு வது என்பது வேதனைக்கு உரி யது. அமெரிக்கா, ஜப்பான் நாடுகளில் பி.டி. ரக கத்த ரிக்காய் உற்பத்தி செய்யப் பட்டு வந்தாலும், மக்கள் மத் தியில் வரவேற்பை பெற வில்லை. பி.டி. ரக கத்த ரிக்காயை உற்பத்தி செய்தால், மகரந்த சேர்க்கை காலங்க ளில் மற்ற பயிர்களும் பாதிப் படைகின்றன. நம்முடைய நாட்டில் பல்வேறு காய்கறி கள் உற்பத்தி செய்து பயன்ப டுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பி.டி. கத்தரிக்காயை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

### விவசாயிகள் பாதிப்பு

இன்று மரபணு மாற்றப் பட்ட கத்தரிக்காயை உற்பத்தி செய்ய அனுமதித்தால், அதைத்தொடர்ந்து ஒவ் வொரு காய்கறி வகைகளும் ஒன்றன்பின் ஒன்றாக உற்பத் திக்கு தயாராகி விடும். இன்று பலவிதமான தானிய வகை களை இழந்து வருகிறோம். மரபணு மாற்றப்பட்ட காய்க றியை உற்பத்தி செய்தால், கத் தரிக்காய் வகையையும் இழந்து விடுவோம். கொஞ்சம் கொஞ் சமாக இழந்து வரும் தானி யங்களின் அருமை இப்போது தெரியாது. மீண்டும் தொடக் கத்தில் இருந்து முழுமையாக உருவாக்கினால் தான் தெரி யும். பி.டி. கத்தரிக்காயை உற் பத்தி செய்தால், நாட்டின் அடிப்படையான விவசாயம் பாதிக்கப்படும். இதனால் விவ சாயிகளின் பாதிக்கப்படு வார்கள். இந்த கத்தரிக்காயை உற்பத்தி செய்து பயன்படுத்த அரசு மவுனம் சாதித்து வரு வதை பார்க்கும் போது, நடை முறைப்படுத்த விருப்பம் இல் லாமல் இருப்பதாக தோன்று கிறது. பி.டி. ரக காய்கறிகளை உற்பத்தி செய்தால் மண்ணின் வளம் நிச்சயம் பாதிக்கப்ப டும். பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வரும் மர பணு மாற்றப்பட்ட (பி.டி) கத் தரிக்காயை அறிமுகப்படுத்த கூடாது. இது குறித்து அரசு நல்ல முடிவை எடுக்க வேண் டும்.

இவ்வாறு சத்குரு ஜக்கி வாசுதேவ் கூறினார்.

### சிவராத்திரி

மேலும், ஈஷா யோகா மையத்தில் நடைபெற உள்ள சிவராத்திரி விழா குறித்து சத் குரு ஜக்கி வாசுதேவ் கூறும் போது, சூரியனின் ஓட்டம் தென் பகுதியில் இருந்து வடக்கு பகுதிக்கு மாறும் நாள் சிவராத்திரியாக கடைப்பி டிக்கப்பட்டு வருகிறது. பூமி யில் எந்த ஒரு மாற்றம் நிகழ்ந் தாலும், அது நம்முடைய உட லில் பிரதிபலிக்கிறது. சிவராத் திரி நாளன்று, நம்முடை முது கின் தண்டுவடம் தரையில் படாமல் இருப்பது நல்லது. அதற்காகதான் சிவராத்திரி நாளன்று யோகா, ஆன்மிக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மக்கள் பயன் அடைந்து வருகின்றனர். கடந்த ஆண்டு 10 லட்சம் பேர் சிவராத்திரி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. கூட்ட நெரி சலை தவிர்க்க தமிழ்நாடு முழு வதும் 22 நகரங்களில் ஈஷா யோகா மைய நிகழ்ச்சியை மக்கள் பார்த்து பயன் பெறு வதற்கு வசதி செய்யப்பட்டு உள்ளது, என்றார்.